Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

தனிப்பிரதி ரூ. 5/ –
Reg. No. KKI/63/2015-2017

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 63 உம்முடைய ஆசாரியர்கள் நீதியைத் தரித்து, உம்முடைய பரிசுத்தவான்கள் கெம்பீரிப்பார்களாக சங்.132:9 நவம்பர் 2017 No.11

ஒவ்வொரு கிறிஸ்தவனும் சுவிசேஷப் பணி செய்ய வேண்டும் என்பதற்கான வேத புத்தக ஆதாரங்கள்

Biblical reasons for every Christian to Evangelize

Alan Furst

சுவிசேஷம் அறிவிப்பது எவ்வளவு முக்கியமானது? அது சில கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட கரிசனையா? மிஷனெரிகளுக்கும் போதகர்களுக்கும், சுவிசேஷகர்களுக்கும் மட்டுமா இந்தப் பணி? தங்கள் வாழ்க்கை முறையிலும், நம்பிக்கைகளிலும் மட்டும் திருப்தியுடனிருக்கும் மக்களைக் குறித்து ஏன் கவலைப்பட வேண்டும்? பத்து ஆண்டுகளுக்கு மேலாகக் கிறிஸ்தவனாகவும் கடல் கடந்து சென்ற மிஷனெரியாகவும் மிருந்த நான் ஒரு நாள் உட்கார்ந்திருந்து சுவிசேஷப் பணியில் ஊக்கமடைய வேத அடிப்படையிலான காரணங்களைக் கண்டு பிடிக்க முயற்சித்தேன். நான் கண்டு பிடித்தவைகளைக் கீழே குறிப்பிடுகிறேன்.

இழந்து போனவர்களின் இழப்பு

லூக்கா 15-ல் இழந்து போன 3 காரியங்களைக் குறித்து படிக்கிறோம். அவை காணாமற்போன காசு, காணாமற்போன ஆடு, காணாமற்போன மகன் ஆகியவையாகும். இழந்து போனவர்கள் மனந்திரும்பி உரிய சொந்தக்காரரிடம் திரும்பி வர வேண்டும். ஆனால் இழந்து போன மகனுடைய உவமை மூலமாகவே 'இழந்து போனது' என்பதின் உட்கருத்தை அறிய முடிகிறது. 'குமாரன் மரித்தான் திரும்பவும் உயிர்த்தான், காணாமற்போனான் திரும்பவும் காணப்பட்டான்' என இரு முறை இவ்வுவமையில் கூறப்பட்டுள்ளது. மரிப்பதும், காணாமற்வோவதும் சமமானது.

லூக்கா 19:10-ல் "இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" என்றும் யோவான் 3:16-ல் விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கேட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படி கிறிஸ்து வந்தார் என்றும் வாசிக்கிறோம்.

இழந்து போவது (lost) என்பதற்கு கிரேக்கத்தில் இரு கருத்துக்கள் இணைந்து ஒரு வார்த்தை காணப்படுகிறது. அதன் முதல் பகுதி பிரிந்து விட்டுச் செல்வதை காண்பிக்கிறது. முன்பு காணப்பட்ட ஒரு தொடர்பு முறிந்து விட்டது. இரண்டாம் பகுதி அழிவு, மரணம், நிர்மூலம் ஆகிய கருத்துக்களைத் தருகிறது. இதுதான் இழந்து போனவர்களின் நிலை.

❖கிறிஸ்துவை நேசிக்காத அனைவரும் இழந்து போன ஆத்துமாக்களே.

நித்தியத்தின் நிச்சயம்

மத்.24:35-ல் இயேசு, "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை" என்று இயேசு கூறியிருக்கிறார். தேவன் நித்திய மானவர். எனவே அவருடைய வார்த்தைகள் நித்தியமான முக்கியத்துவம் பெற்றவை. இதைக் குறித்து தானி.12:1-3 வசனங்களில் ". . . பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அனேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும், இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள். . . ." என்று வாசிக்கிறோம். இதிலிருந்து நாம் சிரத்தை கொள்ள வேண்டிய 3 காரியங்கள் வெளிப்படுகின்றன: i) எல்லா மனிதரும் எப்போதும் நிலைத்திருப்பார்கள். ii) எல்லாரும் ஒரு உயிர்த்தெழுதலை சந்திப்பார்கள். iii) எல்லா இடங்களிலுமுள்ள ஆதிகாலத்திலிருந்தே வாழ்ந்த அனைவரும் ஒன்றில் நித்திய ஜீவனையோ அல்லது நித்திய ஆக்கினையையோ அடைவார்கள்.

❖கேள்வி என்னவென்றால் மரணத்திற்குப்பின் வாழ்வு உண்டா என்பதல்ல, ஒருவன் தேவனுடைய ஈவாகிய ஜீவனை மரணத்திற்குப் பின்பு பெற்றுக் கொள்வானா என்பதுதான்.

நரகத்தின் பயங்கரம்

தூய ஆவியானவர் நரகத்தைக் குறித்துக் கூறுவது என்ன? 'தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கும் கீழ்ப்படியாதவர்களுக்கு நீதியுள்ள ஆக்கினையை செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜ்வாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்.... அவர்கள் கர்த்தருடைய சன்னிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்' 2தெச.1: 7-10.

வெளிப்படுத்தின விசேஷம் இவ்வாறு எச்சரிக்கிறது: "அவர்கள் வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும், மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது". (வெளி.14:11) "மேலும் அவர்களை மோசம் போக்கின பிசாசானவன், மிருகமும், கள்ளத் தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்" வெளி.20:10.

"அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டன, இது இரண்டாம் மரணம். ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ, அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்" வெளி.20:14-15.

மனந்திரும்பாதவர்களுக்கு எதிராகக் கூறப்படும் கடினமான எச்சரிப்புகள் இவை. "நீங்களும் மனந்திரும்பாமற்போனால் அப்படியே கெட்டுப் போவீர்கள்" லூக்.13:5. விசுவாசியாதவர்களின் நிலையைக் குறித்து கிறிஸ்து இப்படி கூறினார்.

கர்த்தருக்கு விரோதமாக புரட்சி செய்கிறவர்களைக் குறித்து ஏசாயா தீர்க்கன் "அவர்கள் புழு சாகாமலும், அக்கினி அவியாமலுமிருக்கும்" என்கிறார் ஏசா.66:24.

❖ இந்த நிலையில் தங்கள் நித்தியத்தையாரேனும் செலவு செய்வதை நீங்கள் விரும்புகிறீர்களா?

கிறிஸ்துவின் பரலோகத்தில் பிரவேசிக்க உத்தமமும் நற்குணமும் போதுமானவை என்று அனேகர் சொல்கிறார்கள். பொய்யுரையாதவரும், ஏமாற்றாதவருமான தேவன் சொல்வதென்ன? "நான் நானே கர்த்தர், என்னையல்லாமல் இரட்சகரில்லை" ஏசா.43:11.

இயேசு, "நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" யோவா.14:6 என்றார். அப்போஸ்தலர்கள் தைரியமாக, "அவராலேயன்றி, வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே, அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" என்றனர் அப்.4:12. அப்.பவுல் "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்

(3-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S. Devadason 1955-1999)

முகவரி: வருகையின் தூதன், நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் 629 001
Mobile: 95432 21008 e.mail:varukayinthoothan@hotmail.com

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

வாக்குத்தத்தம்

"என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்; அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்" நீதிமொழிகள் 8:17

வாசகருக்கு என் அன்பு கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதான மும் உண்டாவதாக.

நவம்பர் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியுடன் தாழ்மையோடு ஸ்தோத்தரிக்கிறேன். இந்த வருடத்தின் இறுதி நாட்களுக்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம். பட்டாடை கள், பட்டாசுகள், பலகாரங்கள், பட்டொளி வீசும் வீண் அலங்காரங்கள் இவைகளை கண்டிப்பாக களையுங்கள்.

யோவானைக் குறித்து முதலாவது எழுதுகிறேன்: "அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பான், திராட்ச ரசமும் மதுவும் குடியான், **தன் தாயின் வயிற்றிலிருக்கும் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான்**" லூக்கா 1:15.

பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட யோவான் பிரசங்கிப் பதைக் கேளுங்கள்: "அப்பொழுது ஜனங்கள் அவனை நோக்கி: அப்படியானால் நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். அவர்களுக்கு அவன் பிரதியுத்தரமாக இரண்டு அங்கிகளையுடையவன் இல்லாதவனுக்குக் கொடுக் கக்கடவன்;. . . . என்றான்" லூக்கா 3:1.

ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ள வன் கேட்கக்கடவன் (வெளி.2:7,11,17,29; 3:6,13,22) என்று **7** தடவை எழுதப்பட்டிருப்பதை காதுள்ளவன் கேட்கக் கடவன்.

ஒருவன் ஓடி வந்து, அவருக்கு முன்பாக முழங்கால் படியிட்டு: நல்ல போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான்.

அதற்கு இயேசு:... கற்பனைகளை அறிந்திருக்கிறாயே என்றார்.

அதற்கு அவன், போதகரே, இவைகளையெல்லாம் என் சிறு வயது முதல் கைக்கொண்டிருக்கிறேன் என்றான்.

இயேசு அவனைப் பார்த்து, **அவனிடத்தில் அன்பு கூர்ந்து**:. . . என்னைப் பின்பற்றி வா என்றார்.

அவன்....துக்கத்தோடே போய் விட்டான் மாற்கு 10:17-22.

அருமையான கர்த்தருடைய பிள்ளைகளே, உங்களிடத் தில் மிகவும் அன்பு கூருகிறபடியால்தான் வேத வசனத்தி லுள்ள இவைகளை கண்டிப்பாக உங்களுக்கு எழுதுகிறேன். உங்களிடத்தில் ஏதாவது பணம் இருக்குமானால் அதை தயவுசெய்து தேவனுடைய ராஜ்யத்தை அறிவிக்கும் பணிக்கு தாராளமாய் கொடுத்து விடுங்கள், தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

ஒரு மிஷனெரி பத்திரிகையின் "**பொதுச்சேவகரிடமிருந்து. . .** " (2016) என்ற பகுதியிலுள்ளதை கீழே அச்சிடுகிறேன்:

ஒவ்வொரு ஆண்டும் நாம் புதிய ஆண்டுக்குள் செல்லும் போது, எல்லோரையும் வாழ்த்துகிறோம். மகிழ்ச்சியான புத்தாண்டு வாழ்த்துக்கள் என்பது இந்நாட்களில் மிகவும் பிரபலமான வாழ்த்துக்கள்.

மகிழ்ச்சியான புத்தாண்டு மற்றவர்கள் வாழ்த்தும்போது நமக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால், நடைமுறை வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பதெல்லாம் நமது விசுவாசத்தோடு இணைக்கப்பட்ட வார்த்தைகள். விசுவாசம் இல்லாமல் மகிழ்ச்சி நம் பங்காக முடியாது. இதோ, சகல ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை தரும் நற்செய்தி என தேவதூதனால் அறிவிக்கப்பட்ட செய்தி உண்மையான ஒருசெய்தி. ஆனால், இந்த செய்தி ஒருகுறிப்பிட்ட காலத்தின் (Seasonal) செய்தியல்ல.

கடந்த மாதத்தில் மும்பையில் உள்ள ஒரு திருச்சபையில் கிறிஸ்துமஸ் செய்தியை பகிர்ந்து கொள்ள சென்றிருந்தேன். புதிய ஆடைகள், ஆலய அலங்காரங்கள் மற்றும் இசைக் கருவி கள் சகிதம் அந்த ஆராதனை மிக மிக நன்றாக இருந்தது. நமது இந்து சகோதரர்களின் தீபாவளிக்கு இணையாக ஒளிவிளக் குகள் சிறப்பாக ஜொலித்தன. இவற்றை பார்த்தபோது, நாம் மெதுவாக சடங்காசாரத்திற்குள்ளாக சென்று கொண்டிருக் கிறோமோ என்ற வருத்தம் எனக்கு வந்தது.

கிறிஸ்துமஸ் - கிறிஸ்துலெஸ் (கிறிஸ்து இல்லாத) பண்டிகையாக மாறிவிட்டதோ? என ஒரு ஐயத்தை எனக் குள்ளாக உண்டாக்கியது. அனுபவிக்காத ஒரு செய்தியை நாம் ஒருபோதும் விரும்புவதில்லை. மிஷனெரிப் பணியா னது பல ஆலயங்களிலும் அலட்சியப்படுத்தப்படுவதன் காரணம், அனுபவமில்லாத, அறியாத மக்கள் (நற்செய்தியை) அனேகர் கிறிஸ்தவ மார்க்கத்தை பின்பற்றுகிறவர்களாக மட்டும் இருப்பதுதான்.

பல ஆண்டுகளுக்கு முன், ஒரு சகோதரனுக்கு (பழங்குடி) நற்செய்தியை பகிர்ந்து கொண்ட அனுபவம் என் நினைவுக்கு

எழுப்புதலுக்காக இதய தேறல் 2018

இயேசு கிறிஸ்துவுக்காக 7 மணி நேரம் உபவாச ஜெபம்

மாதம்	தேதி	இடம்
ஜனவரி	27-01-2018 4-வது சனி	E.W.M. Prayer House புதுக்கோட்டை,
பிப்ரவரி	17-02-2018 3-வது சனி	அசெம்பிளி ஆப் காட் சபை கோயம்பத்தூர்
மார்ச்	17-03-2018 3-வது சனி	அசெம்பிளி ஆப் காட் சபை அரியா குப்பம்,பாண்டிச்சேரி
ஏப்ரல்		
மே		
ஜூன்		
ஜூலை	21-07-2018 3-வது சனி	கன்மலை ஆராதனை சபை நல்லிக்குப்பம், கடலூர்
ஆகஸ்ட்	18-08-2018 3-வது சனி	விசுவாச ஜெப சபை கல்லக்குறிச்சி, விழுப்புரம்
செப்டம்பர்	15-09-2018 3-வது சனி	அசெம்பிளி ஆப் காட் சபை தேனீ
அக்டோபர்		
நவம்பர்		
டிசம்பர்		

(7-ம் பக்கம் பார்க்க)

வருட சந்தா ரூ.100.00

சந்தா, காணிக்கை, கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் -629 001.

VARUKAYIN THOOTHAN
Newport Street, Nagercoil-629 001.
Mobile: 95432 21008

வங்கி கணக்கு எண்

VARUKAYIN THOOTHAN
A/c. No.:431521036
Indian Bank,
W.C.C. Road, Nagercoil-1
IFS Code : IDIB000N006

வங்கி வழியாக பணம் அனுப்பினால், தொலைபேசி, ஈமெயில், SMS வழியாக உடனே எங்களுக்கு தெரிவியுங்கள்

email :
varukayinthoothan@hotmail.com

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தரும் ஒருவரே" என்று 1தீமோ.2:5 -ல் கூறுகிறார்.

இந்த வசனங்களை நாம் விசுவாசித்தால் சுவிசேஷத்தை கேட்காத வர்களும் கூட பாவம் செய்து கொண்டிருந்தால் என்ன நிலை ஏற்படும் என்பது விளங்கி விடும். மேலும் வேதவசனத்தில் கூறப்பட்டி ருக்கும் இரட்சகரைத் தவிர வேறு யாரை வணங்குகிறவர்களா யிருந்தாலும் அவர்களின் முடிவும் இதுவே. ஏனெனில் ஒரே இரட்சகரும் ஒரே வாசலும் மட்டுமே தூய நகரத்தில் பிரவேசிக்க கொடுக்கப்பட்டுள்ளது.

❖அது உண்மையாகவே இடுக்கமான வாசல்

கிறிஸ்துவின் நெருக்கி ஏவும் அன்பு

நம்முடைய அன்பு எத்தகைய தாயிருக்க வேண்டும் என்பதை பவுல் 1கொரி.13-ம் அதிகாரத்தில் விளக்குகிறார். குறிப்பாக அது 'தற்பொழிவை நாடாது'. நான் தெய்வீக அன்பினைக் குறித்து அறிந்த மட்டில் அது எப்போதும் பிறருடைய உயரிய நன்மைகளையே நாடுவதாயிருக்கிறது. அத்தகைய அன்பு இல்லாவிட்டால் அது தேவ அன்பு அல்ல. யாரும் கெட்டுப் போவது தேவனுடைய விருப்பமல்ல. அவர் ஒருவரைத் துன்புறுத்த வேண்டுமென்றே துன்புறுத்துப வருமல்ல.

பவுல் இத்தகைய அன்பால் நெருக்கி ஏவப்பட்டார். "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்; பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும் படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்" 2கொரி.5:14,15. நம்மில் தேவ அன்பு உண்டென்று நாம் கூறுவோமானால் இழந்துபோன ஆத்துமாக்களுக்கான கரிசனை நமக்கு இருக்க வேண்டும்.

அப்.யோவான் எழுதும் போது "நீங்களும் எங்களோடு ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கு அறிவிக்கிறோம். எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடுமிருக்கிறது" 1யோ.1:3 என்கிறார்.

தேவ அன்பு அவரில் விசுவாச முள்ளவர்களில் உருவாகி அவரது அற்புதமான அன்புக்கு சாட்சியா யிருக்கும்.

❖ நான் தேவனை நேசித்தால் அவரை அறிவிக்க வேண்டும்.

அவர் திரும்ப வருவதைக் குறித்த வாக்குத்தத்தம்

"உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" அப்.1:11. "கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜ்வாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படும் போது அப்படியாகும்" 2தெச.1:8. நிச்சயமாகவே இயேசு சீக்கிரம் வரப் போகிறார். அவரது சிங்காசனத் திற்கு முன்பாக மக்கள் நிறுத்தப்படும்போது சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வாய்ப் பிராது.

"தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத் தத்தத்தைக் குறித்து தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப் போகாமல், எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ள வராயிருக்கிறார். கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும், அப்பொழுது வானங்கள் மட மடவென்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்து போம்" 2பேதுரு 3:9-10.

❖"ஆண்டவரே எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குத் தாரும்"

ஒவ்வொருவரும் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்

2கொரி.5:10-ல் தேவ ஆவியானவர் "ஏனென்றால் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்கபலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டுமென்று கூறியிருக்கிறார். 4-ம் 5-ம் அதிகாரங்களில் பவுல் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கிப்பதைக் காணலாம். 18-ம் வசனத்தில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவை என்றும் காணப்படாதவை நித்தியமானவை என்றும் கூறுவதோடு சுவிசேஷத்தைப் பிரசங்கிப் பதால் வரும் பாடுகளையும் எழுதுகிறார். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் ஸ்தானாபதிகள். மக்கள் கிறிஸ்துவைப் பின்பற்றும்படி அவர்களைத் தூண்டி விட வேண்டும்.

ரோமர் 10:14-15 வசனங்களில் அவர் எழுப்பும் கேள்விகள்:- அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்து கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி நற்காரியங்களை சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவை என்று எழுதியிருக்கிறதே'. எனவே பெரிய பொறுப்பு சபையின் தோள்களில் வைக்கப்படுகிறது. எனவே நாம் ஒவ்வொருவரும் பொறுப்புடையவர்கள்.

'நீங்கள் கணக்கு ஒப்புவிக்க ஆயத்தமா?'

அந்தக் கட்டளையின் மகத்துவம்

மத்.28:18-20 வசனங்கள் ஒரு மிகப் பெரிய புத்தகத்தை முடிக்கும் நல்ல வார்த்தைகள் மட்டுமல்ல, எபேசியர் முதலாம் அதிகாரத்தின்படி அவை சபையின் தலைவரும் சர்வ வல்லமையுள்ளவரும், அகிலாண்டத்தைப் படைத்தவருமான ஆட்சியாளர் கூறியவை. அது முற்றிலும் ஒரு கட்டளை.

இந்த கட்டளை சபைக்கு அளிக்கப்பட்டது. "பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீ கட்ட விழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்" மத்.16:19. சபையின் மூலமாக தேவனுடைய பல மடங்கான ஞானம் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்பதே அதன் பொருள் எபே.3:10. கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தினால் தேவனோடு ஒப்புரவாக முடியும் என்பதை இது அடக்கியுள்ளது.

❖நீங்கள் உங்கள் கடமையை செய்கிறீர்களா?

இதை முடிக்கு முன்பாக நீங்கள் செய்ய வேண்டிய ஒரு காரியத்தைக் கூறுகிறேன். மனந்திரும்புதலாலும், விசுவாசத்தாலும் தங்கள் வாழ்வை இயேசுவுக்கு அர்ப்பணிக்காத உங்களுக்குத் தெரிந்த மக்களின் பெயர்களை எழுதுங்கள். பின்பு சுவிசேஷப் பணியில் தூண்டப்படுவதற்கான காரணங்களை மறுபடியும் வாசிக்க வேண்டும். "நான் சுவிசேஷப் பணியில் ஈடுபட வேண்டுமா?" என்ற கேள்வியைக் கேட்கக் கூடாது. ஆனால், நான் எப்படி இந்த மக்களுக்குக் கிறிஸ்துவை அறிவித்து அவர்களை இரட்சிக்க முடியும்? என்று கேட்க வேண்டும். இதை செய்யாமலிருக்க ஏதேனும் காரணம் வேத புத்தகத்திலிருக்கிறதா?

பாரத்தோடு கூடிய சுவிசேஷ பணி

Evangelism with a passion

Morris chalfant

மனிதனுடைய துக்கமான நிலையைக் குறித்து இயேசு உணர்வுடையவராயிருந்தார். இந்த உணர்வு விழுந்து போன மனித சமுதாயத்தை தூக்கி விடத்தூண்டியது. இந்த உணர்வு தோல்விகளையும் ஏமாற்றங்களையும் தாண்டியிருந்தது. அது வெறுப்பு, தப்பபிப்பிராயங்கள், சந்தேகம், மரணம் ஆகிய வற்றை மேற்கொண்டது.

கலா.3:27-ல் கூறப்படும் 'கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுதல்' என்பது கிறிஸ்துவின் இந்த உணர்வைத் தரித்துக் கொள்வதாகும். அதாவது இழந்து போனவர்களுக்கான கரிசனை, இரக்கம், மற்றும் பாரம் ஆகியவைகளாகும்.

பிறர் மேலுள்ள நமது உருக்கம், கரிசனை ஆகியவற்றை கிறிஸ்துவின் தன்மைகளோடு ஒப்பிடுவது நல்லது. நீங்கள் இப்போது வாழ்ந்து கொண்டி

ருக்கும் சமுதாயத்திற்காக எப்போது கண்ணீர் விட்டீர்கள்? சபையின் ஆவிக்குரிய தேவைகளுக்காக எப்போது அழுதீர்கள்?

மக்கள் மேலுள்ள ஆழமான அன்பு, உருக்கம் ஆகியவையே அவர்கள் கிறிஸ்துவிடம் இழுக்கப்பட காரணமாயிருந்தது. இந்த அன்பு, உருக்கம் ஆகியவை நம்மைத் தூண்டும் அளவில் நமது சாட்சி உணரப்படும். கொழுந்து விடும் அன்பின் மொழியை அனைவரும் புரிந்து கொள்ள முடியும்.

எத்தனை வகையான நவீன முறைகளை பயன்படுத்தினாலும் கிறிஸ்துவின் மேலும், ஆவிக்குரிய உண்மைகள் மேலும், நித்திய நன்மைகள் மேலும் வாஞ்சையில்லாவிட்டால் நமது பணி தடைபட்டு விடும்.

ஆரம்ப திருச்சபை பிறந்த காலக் கட்டத்தில் சன்மார்க்க நெறிகளெல்லாம் மீறப்பட்டு தீமை நிறைந்திருந்தது. அங்கத்தினர் பொருளாதார வசதியோ, சமூக அந்தஸ்தோ, கிறிஸ்தவ ஸ்தாபனங்களின் உதவியோ இல்லாதவர்களாயிருந்தனர். இன்று நமக்கிருக்கும் வசதிகளும் வாய்ப்புகளும் இல்லாதிருந்தது. ஆனால் அவர்களில் மக்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்ற வாஞ்சை இருந்தது.

ஆத்தும ஆதாயப்பணி செய்த வர்களின் வாழ்க்கைகளை நாம் படித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் சுவிசேஷப் பணியினை எவ்வாறு செய்தார்கள் என்பதனை கவனிக்க வேண்டும்.

ÛVïë cçkâà¬_| 'நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்' என்று அவர் பிரசங்கித்தார். அதற்காக மக்கள் அவரை அடிக்கடி விமர்சித்ததுண்டு. ஏன் நீங்கள் அதையே அடிக்கடி பிரசங்கிக்கிறீர்கள் என்பதற்கு அவரது பதில், "ஏனெனில் நீங்கள் கட்டாயம் மறுபடியும் பிறக்க வேண்டும்" என்பதுதான்.

ஜோனத்தான் எட்வர்ட்ஸ் அடிக்கடி தேவனுடைய நியாயத் தீர்ப்பைக் குறித்தும், பில்லிசன்டே 'உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும்' என்றும் அழுத்திப் பிரசங்கித்தனர். ஜிப்ஸி ஸ்மித் இயேசுவின் அழகைக் குறித்தும் A.B.சிம்சன் உலக சுவிசேஷ பணியினைக் குறித்தும் அதிகமாகப் பிரசங்கித்தனர்.

மூடியின் சபையிலுள்ள அனைத்து விளக்குகளிலும் 'தேவன் அன்பாகவே இருக்கிறார்' என்று எழுதப்பட்டிருந்தது. அவர் தேவ அன்பை ஆழமாகக் கற்றுக் கொண்டபடியால், "மக்களை நேசிக்காமலிருக்க என்னால் முடிவதில்லை" என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். அவர் தேவ அன்பைக் குறித்து பிரசங்கிக்கும்போது கண்ணீர் வடிப்பார்.

ஆயினும் மேற்கூறிய அனைவரும் ஆத்தும பாரமுடையவர்கள் என்பதில் சந்தேகமில்லை. மக்கள் கிறிஸ்துவிடம் வரவேண்டும் என்பதில் அவர்கள் அதிக அக்கரையுடனிருந்தனர்.

அனேக கிறிஸ்தவர்கள் சிற்சில வேளைகளில் இழந்துபோனவர்களின் தேவையால் தொடப்படுகிறார்கள். பிரசங்கம் சரியாக இருந்தாலும் உணர்ச்சியால் செயல்படுவது போதுமானதாலும் நாம் நம்மிடமே "கிறிஸ்துவுக்காக மக்களை ஆதாயம்பண்ண எதையேனும் செய்ய வேண்டும்" என்று சொல்லிக் கொள்கிறோம்.

ஆனாலும் ஆத்தும பாரம் நம் வாழ்வில் மேம்பட்டு நிற்க வேண்டும். இந்த பாரத்தால், "எனக்கு மிகுந்த துக்கமும், இடைவிடாத மன வேதனையும் உண்டாயிருக்கிறது; நான் சொல்லுகிறது பொய்யல்ல, கிறிஸ்து வுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன் என்று பரிசுத்த ஆவிக்குள் என் மனச்சாட்சியும் எனக்கு சாட்சியாயிருக்கிறது. மாம்சத்தின்படி என் இனத்தாராகிய என் சகோதரருக்குப் பதிலாக நானே கிறிஸ்துவை விட்டு சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்புவேனே" ரோமர் 9: 1-3 என்று பவுல் எழுதுகிறார்.

பரலோகம் அனுப்புகிற ஒரு எழுப்புதலின்றி எந்த வழிமுறையாலும் ஆத்தும ஆதாயம் செய்ய முடியாது. ஒவ்வொரு நிமிடமும் நூற்றுக் கணக்கான மக்கள் மடிந்து நரகத்துக்குச்சென்று கொண்டிருக்கும்போது நம்மில் காணப்படும் குறைவுகளைப் போக்க நம்மை அசைக்கும் ஒரு எழுப்புதல் வேண்டும்.

"நமது சுவிசேஷப் பணியின் தவறு என்ன?" என்ற கேள்விக்குப் பதிலாக, 'நமது இருதயங்களின் குறைபாடு என்ன?' என்று கேட்க வேண்டும். நமது எழுப்புதல் காலங்களில் மட்டுமல்ல, நமது அன்றாட வாழ்வில் சுவிசேஷ பணியை சந்தோஷமானதாகவும், இயற்கையானதாகவும் பயனுள்ளதாகவும் ஆக்கிய அவசரமனநிலை, சுவிசேஷ எதிர்பார்ப்பு ஆகியவை அடங்கிய ஆத்தும பாரமும் வாஞ்சையும் எங்கே போயின?

சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்ற மனநிலையை உருவாக்க முடியாது. சுவிசேஷ எதிர்பார்ப்பு மக்களுக்குள் ஒழுங்குபடுத்தப்பட முடியாது. மனவுருக்கம் கட்டாயத்தால் ஏற்படாது. ஆத்தும பாரம் வற்புறுத்தலாலோ, முன்னேற்றப்பணிகளாலோ, திட்டங்களாலோ ஏற்படுத்த முடியாதது.

சுவிசேஷப் பணி பாரத்தோடு செய்யப்படும்போது அதன் முதல் கரிசனை ஆத்துமாக்களாகும். ஆனால் அது வெறும் முன்னேற்றப் பணியாயிருந்தால் கணக்கெடுப்பில் முடியும். சுவிசேஷப்பணி ஆத்தும பாரத்தோடு செய்யப்படும் போது அது தேவராஜ்யத்தைக் கட்டியெழுப்பும். ஆனால் அது முன்னேற்றப் பணியாயிருந்தால் ஸ்தாபனங்களை உருவாக்கும். சுவிசேஷப்பணி தாகத்தோடு செய்யப்பட்டால் அதை செய்யும் வாய்ப்பினிமித்தம் சந்தோஷம் உண்டாகும். அது முன்னேற்றப்பணியாக இருக்குமானால் அழுத்தமும் வேதனையும் ஏற்படும்.

சுவிசேஷப் பணி ஆத்துமத் தாகத்தோடு செய்யப்படும்போது தானாகவே சாட்சியில் அவசரமிருக்கும். ஆனால் மாறாக அது முன்னேற்றப் பணியாயிருந்தால் சாட்சியில் உயிரூட்டம் இராது.

சுவிசேஷப் பணி வாஞ்சையால் செய்யப்படும்போது அது ஒரு ஆவிக்குரிய பயிற்சியாய் இருதயத்திற்கு அமையும். அது முன்னேற்றப் பணியாக மட்டுமிருக்கும்போது அது மார்க்க சம்பந்தமான வெற்றியைப் பெறும் ஒரு செயலாயிருக்கும்.

நீதி.29:18-ன்படி "தீர்க்கதரிசன மில்லாத இடத்தில் ஜனங்கள் சீர் கெட்டுப் போவார்கள்". தீர்க்கதரிசனத்தின் மிக முக்கிய பகுதி ஆத்தும பாரம். நமக்கு உத்தம பாரமும் வாஞ்சையும் ஆத்துமாக்கள் மேல் இல்லாவிடில் நமது நிலத்தைப் பற்றிய காட்சியை காண முடியாததுடன், நாம் செய்ய வேண்டிய பணியையும் அறிந்து கொள்ள முடியாது. ஜெபம் இருந்தால் மட்டுமே ஆத்தும பாரம் ஏற்பட முடியும்.

கிறிஸ்துவுக்காகவும் அவருடைய ராஜ்யத்தைக் கட்டி எழுப்பி உலகத்தை ஜெயிக்கவும் செய்வதென்ன? "உலகமெங்கும் போங்கள்" மாற்.16:15 என்பதுதான் இயேசுவின் கட்டளை. எங்கு செல்ல வேண்டும்? உலகமெங்கும் செல்லவேண்டும். அது அடுத்த இடமாகவோ தேசமாகவோ இருக்கலாம். நமக்கு அருகிலிருந்து பணிபுரிபவர்களாகவுமிருக்கலாம்.

பாரம் தேவை. தூய்மையான பாரம் ஊழியக்காரருக்கு வேண்டும். பரலோகக் காட்சியுடன் அதோடு சேர்ந்த பாரம் வேண்டும்.

ஆதித்திருச்சபையில் "சிதறிப் போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள்" அப்.8:4. அவர்களிடம் தங்கள் எஜமானின் ஆவி காணப்பட்டது. "உம்முடைய வீட்டைக் குறித்த பக்தி வைராக்கியம் என்னை பட்சித்தது" யோவா.2:17. தேவன் தாமே இந்த ஆத்தும பாரத்தை நமக்கு தருவாராக.

நவம்பர் மாத உபவாச ஜெபம்

Heart Cry for Holy Spirit Revival

எழுப்புதலுக்காக
இதய கதறல்-2017

(உயிர்மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : 11-11-2017
2-வது சனிக்கிழமை

சமயம் : காலை 10.00 மணி முதல்
மாலை 5.00 மணி வரை

இடம் : C.S.I. சபை
காந்திநகர், திருநெல்வேலி

தொடர்பு : Rev.G.ஆசீர்,
திருநெல்வேலி
மொபைல் : 94425 84818

சுவிசேஷப்பணி இல்லத்தில் ஆரம்பிக்கிறது

Evangelism begins at home

ஒரு மனிதன் தன் வாழ்வாதாரங்களை எண்ணிப் பார்க்கும் போது அவன் தனது இல்லம், வாகனம், சில புத்தகங்கள், குடும்ப ஏடுகள் போன்ற வற்றை நினைக்கிறான். சிலர் தற்கால வங்கிக் கணக்கு, உயர்தர பொருட்கள் போன்றவற்றை நினைவு கூரலாம்.

ஆனால் அவனுடைய மிக அருமையான உடைமை அவனது குடும்பம் என்றால் தவறல்ல. நாம் பெற்றிருக்கும் எல்லா ஈவுகளிலும் நம் இல்லத்தில் பிறந்த பிள்ளைகளே மேலானவர்கள். அவர்கள் வாழ்வு நமது பராமரிப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்களைப் போதிக்கவும், பயிற்சிக்கவும் தேவன் நம்மைப் பொறுப்புள்ளவர்களாக்கியிருக்கிறார்.

உபா.6:6-9 வசனங்களில் இஸ்ரவேல் மக்களுக்கு அளிக்கப்பட்ட கட்டளையைக் காண்கிறோம் (வாசிக்க)

நாம் நமது இல்லங்களிலே அனுதினமும் கிடைக்கும் வாய்ப்புகளை சுவிசேஷம் அறிவிக்கவும், போதனை செய்யவும் பயன்படுத்த வேண்டும்.

கீழ்க்குறிப்பிடும் காரியங்கள் இல்ல சுவிசேஷப் பணிக்கு கூரிய போதனைகளைத் தருகின்றன.

1. உங்கள் பிள்ளைகளைக் கருத்தாய் போதியுங்கள்.

2. குடும்பமாக கூடி வரும்போது இயேசுவைக் குறித்துப் பேசுங்கள்.

3. உங்கள் மாதிரி மூலமாக பிள்ளைகளுக்குப் போதிக்கிறீர்கள் என்ற உணர்வு எப்போதுமிருக்கட்டும்.

4. படுக்கைக்குச் செல்லும் நேரம் நாளின் இறுதி பகுதியை தேவனுக்கும் அவர் பாதுகாவலுக்கும் ஒப்புவிப்பதாயிருக்கட்டும்.

5. புதிய நாளை தேவனோடு ஆரம்பியுங்கள்.

தேவ வசனங்கள் உங்கள் கண்களுக்கு நடுவே ஞாபகக் குறியாயிருக்கட்டும்.

தேவ வசனங்களை நமது இல்லங்களின் நிலைக் கால்களில் எழுத வேண்டும். நமது இல்லங்களின் போதனைகள் கிறிஸ்துவோடுள்ள நமது தொடர்பை பிள்ளைகளுக்குக் காண்பிக்க வேண்டும்.

நான் 7 வயதில் என்னை ஒரு பொது ஆராதனையில் ஆண்டவருக்கு ஒப்புவித்தேன். பாவத்தின் உணர்வு, மனந்திரும்புதல், கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளுதல் ஆகியவையோடு, என் வாழ்வை முழுமையாக ஒப்படைப்பதும் அதே வயதில் என்னில் தூண்டப்பட்டன. எனது இல்லத்தின் தாக்கம் எனது தீர்மானங்களைக் கிறிஸ்துவுக்காகச் செய்ய ஏதுவாயிருந்தது.

எனது தந்தை எனது இல்லத்திலிருந்தே தனது இருதயத்தை இயேசுவுக்கு அளித்ததை நினைவு கூருகிறேன். அவர் சில காலம் நோய்வாய்ப்பட்டிருந்தபோது நாங்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள கேட்டுக் கொண்டும் பயனில்லாமற் போயிற்று. ஒரு நாள் நடு இரவில் மரணம் நெருங்கியபோது எனது தாயார் மரணத்தைக் கடிந்து கொண்டு அப்.16:31-லுள்ள தேவ வாக்குத்தத்தத்தைக் கூறி ஜெபித்தார்கள். "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்".

"அவர் என் குடும்பத்தின் ஒரு பகுதி. ஆண்டவரே அவர் இரட்சிப்படையும் வரை மரிக்கக் கூடாது" என்று ஜெபித்தார்கள். அதே வேளையில் என் தந்தை தன் கரங்களை உயர்த்தி சத்தமாக, "தேவனே பாவியாகிய என் மேல் கிருபையாயிரும்" என்று கதறினார். தேவன் உடனே அவரைத் தொட்டார். மூன்று ஆண்டுகள் கூடுதலாகக் கிறிஸ்தவனாக வாழ்ந்தார். இல்லத்து சுவிசேஷப் பணி கிரியை செய்கிறது.

ஆத்தும ஆதாயம் செய்வது சிலருடைய பணி என்றும் குறிப்பிட்ட சிலருடைய கடமை என்றும் அடிக்கடி எண்ணுகிறோம். நமது சொந்த பிள்ளைகளைக் கூட தேவனுடைய பாதையில் நடத்தும் நல்ல தருணங்களை பயன்படுத்துவதில்லை. அதனைச் செய்வதற்கான சில ஆலோசனைகளைத் தருகிறேன்.

ஒரு நல்ல சமயத்தைக் கண்டுபிடியுங்கள்

ஒருவர் தான் செல்ல வேண்டிய பேருந்தைத் தவற விட்டுக் கொண்டு நிற்கும்போது 'நீங்கள் உங்கள் இருதயத்தை இயேசுவுக்கு ஒப்புவிக்க இந்தக் காலையில் விரும்புகிறீர்களா?' என்று கேட்பது சரியான சமயமல்ல.

இரவு படுக்கைக்குச் செல்லு முன் ஜெபம் செய்யும்போது இப்பணியினை செய்வது நல்லது.

துக்கமான வேளைகளில் கூட தேவவசனத்தைப் போதித்து சுவிசேஷ பணி செய்யலாம். ஒருவர் மனவேதனையோடு இருக்கும்போது, "கிறிஸ்து உங்களுக்கும் உதவி செய்வார். நான் உங்களுக்காக ஜெபிக்கலாமா?" என்று கேட்கலாம்.

ஆலயத்திலிருந்தோ வேதபாட சாலையிலிருந்தோ நடந்த சில காரியங்களைக் குறித்துக் கேள்விகளோடு மக்கள் வரலாம். அப்படிப்பட்ட வேளைகளையும் பயன்படுத்தலாம்.

ஒரு நல்ல இடத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்.

விளையாடும் பொழுதோ, தொலை நோக்கியின் முன்னால் உட்கார்ந்திருக்கும்போதோ வேதபோதனை சரியல்ல.

குடும்ப ஜெப கூடுகை ஒரு சிறந்த இடம். ஒரு மேஜையை சுற்றியோ வேறு ஏதேனும் அறையிலோ கூடி சுவிசேஷ போதனை செய்யலாம். அப்பாவும் மகனும் குளிர் காய்ந்து கொண்டிருக்கும்போதே நடைபெறலாம், அல்லது அம்மா மகளுடன் சமையல் செய்யும் போது கூட சுவிசேஷம் அறிவிக்கலாம். நீங்கள் இப்படிப்பட்ட அனுபவங்களை எதிர் பார்த்து ஜெபியுங்கள்.

வேதவசனங்களை உபயோகியுங்கள்

குழந்தையின் உணர்ச்சிகள் மாறுபட்டுக் கொண்டேயிருக்கும். பெற்றோரோடுள்ள தொடர்புகூட கறைப்படலாம். எனவே, இரட்சிப்பு இயேசுவை அடிப்படையாகக் கொண்டது, அது வேதவசனத்தின் அடிப்படையிலானது என்பதை அவர்கள் அறிய வேண்டும். எனவே கீழ்க்காணும் வசனங்களை அவர்களுக்குச் சுட்டிக் காண்பிக்க வேண்டும்.

1. தேவன் உங்களை நேசிக்கிறார் - யோவா.3:16.

2. எல்லாரும் பாவம் செய்து விட்டனர் - ரோமர் 3:23.

3. உங்கள் பாவங்களுக்காக கிறிஸ்து கிரயம் செலுத்தினார் 1கொரி.15:3.

4. கிறிஸ்து உங்கள் பாவங்களுக்காக மரித்தார் என்பதை விசுவாசியுங்கள் யோவான் 1:12.

5. நீங்கள் விசுவாசித்தால் நித்திய ஜீவனைப் பெறலாம் ரோ.6:23.

இன்னொரு திட்டத்தின்படி ரோமருக்கெழுதிய நிருபத்தினை அடிப்படையாகக் கொள்ளலாம். அது ரோமன் ரஸ்தா எனப்படும்.

1. மனிதனின் தேவை - ரோ. 3:23

2. பாவத்தின் தண்டனை - ரோ.6:23

3. தேவனுடைய ஈவு ரோ.5:8

4. மனிதனுடைய பிரதிவினை ரோ.10:9

உங்கள் குழந்தை வாழ்வின் ஒவ்வொரு குறுக்கு ரஸ்தாவில் நிற்கும் போதும் தேவன் உங்களுக்கு சரியான திசையைக் காட்டுவார்.

உங்கள் குழந்தை எடுக்கும் தீர்மானத்தைப் புதுப்பிக்கத் தவறாதேயுங்கள். அவன் அதை வேத புத்தகத்தில் எழுதட்டும். தனது நண்பர்களிடமும் கூறட்டும். சபையிலோ, வேதபாட சாலையிலோ சாட்சி கூற உற்சாகப் படுத்துங்கள்.

உங்கள் குழந்தையை ஆதாயப் படுத்த தேவனோடு பங்காளிகளாயிருங்கள்.

ஒரு காலத்தில் நம்மிடத்திலிருந்த வல்லமை இப்போது நம்மிடத்தில் இல்லை. அதற்கான சாதாரண காரணம் யாதெனில் ஒரு காலத்தில் தேவனுடைய சமுகத்தில் நாம் முகங்குப்புற விழுந்து கிடந்து நேரம் செலவிட்டது போல இப்போது நாம் செய்யவில்லை.

ஆவியானவரின் வல்லமை இன்றியமையாதது

The spirit's power is indispensable

S.A.Keen

". . .பிதா என்னை அனுப்பினது போல நானும் உங்களை அனுப்புகிறேன். . . . பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்" யோவா.20:21-22.

மிகப் பெரிய கட்டளையை தமது சீஷருக்கு அளித்த இயேசு அதைத் தொடர்ந்து, பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றும் கூறுகிறார். இதிலிருந்து பெந்தெகொஸ்தே அனுபவம் ஒரு விசுவாசி தேவ பணி ஆற்ற இன்றியமையாதது என்று அறிந்து கொள்கிறோம்.

தேவ பணி ஆற்றும் தேவ பிள்ளையின் மகத்துவம் அவன் இயேசுவால் அவர் செய்தது போல பணி செய்ய அனுப்பப்பட்டவன் என்பதில் அடங்கியிருக்கிறது. அவர் பிதாவால் செயல்பட அனுப்பப்பட்டார். கிறிஸ்தவனின் பணி கிறிஸ்துவின் பணி. இயேசு உலகை இரட்சிக்க அனுப்பப்பட்டார். விசுவாசியும் அதை செய்ய வேண்டும்.

இயேசு தமது அதிசயமான வாழ்வால் தமது பங்கை நிறைவேற்றி விட்டார். அவரது உன்னத போதனைகள், அவரது விசேஷித்த பணிகள் அவரது பலியான மரணம் ஆகியவை இதை காண்பிக்கின்றன. உலகத்தை இரட்சிக்க தமது ஜனத்திற்கு அவர் ஒரு பகுதியை விட்டு வைத்திருக்கிறார். அது பிரசங்கித்தல், சாட்சியாயிருத்தல், தியாகம் செய்தல் ஆகியவையாகும். இவைகளை நிறைவேற்ற பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளச் செய்தார்.

மனிதரை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு அனுப்பப்பட்டது போல நாமும் அனுப்பப்பட்டிருக்கிறோம் என்று அறிவீர்களா? இது ஒவ்வொரு தகப்பன், தாய், மனைவி, கணவன், வேதபாடசாலை ஆசிரியர், ஊழியக்காரர், இளைஞர், வயோதிபர் யாவருக்கும் உரியது. இந்த உயரிய அழைப்புக்கு நாம் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளோம். தூய ஆவியானவர் நாம் நல்ல சேவை செய்யவும் நமக்கு அளிக்கப்பட்ட கட்டளையை நிறைவேற்றவும் அவசியம் தேவை.

இயேசு தன் மீது சுமத்தப்பட்ட சேவையை நிறைவேற்ற பிதா அவரை துய ஆவியால் யோர்தான் நதிக்கரையில் அபிஷேகித்தார். தேவ மனிதனாகிய இயேசுவுக்கு பணி செய்ய பரிசுத்த ஆவியின் அபிஷேகம் தேவையானால் நமக்கு எத்தனை அதிகம்!

நமது பணிக்கு ஏற்றபடி

தூய ஆவியானவரின் அருள் நமது பணிக்கு ஏற்றபடி அருளப்படுகிறது. தேவ மனிதனாகிய இயேசு தூய ஆவியானவரைப் பெற்ற பின்பு ஆவியின் வல்லமையால் அற்புதங்களைச் செய்யவும் பிதாவைக் காண்பிக்கவும் சத்தியத்தை வெளிப்படுத்தவும், சிலுவையில் மரிக்கவும் சென்றார். தூய ஆவியானவரின் மூலம் அவர் பாவ நிவாரணத்தை நிறைவேற்றினார். "நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக் கொடுத்தார்" எபி.9:14. ஆவியின் அபிஷேகமின்றி தேவ கட்டளையை நிறைவேற்ற முடியாது. ஏனெனில் இயேசு தூய ஆவியானவரின் ஒத்தாசையின்றி தேவ பணியில் பிரவேசிக்க வில்லை. கட்டளையைக் கொடுத்தாலும், சுவிசேஷ செய்தி ஆயத்தமாய் சீஷர்களின் வாயிலிருந்தாலும் அவர்களிடம் "உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேமில் தரித்திருங்கள்" என்றார் லூக்.24:49.

ஆயினும் இன்று மிஷனெரிகளும்,சுவிசேஷகர்களும், ஊழியக்காரர்களும் இந்த வல்லமையைப் பெறாமல் தேவபணியைச் செய்கிறார்கள். ஆவியின் வல்லமையின்றி ஆத்தும ஆதாயம் செய்ய முயற்சிப்பது சபையின் மிகப் பெரிய புத்தியீனம். ஆனாலும் இவ்வளவாய் செய்தும், கொடுத்தும் பயனில்லையே என்று புலம்புகிறோம். சபை சிந்தித்து ஒரு வினாடி நின்று, முழங்கால்களை முடக்கி ஆண்டவரை நோக்கிப் பார்த்து பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டால் இந்த நூற்றாண்டில் அற்புதங்களை நிகழ்த்த முடியும்.

விசுவாசிக்கும் இருதயங்கள் தூய ஆவியால் நிரப்பப்படுவதுபோல உலகத்தில் இரட்சிப்படைபவர்களும் பெருகுவார்கள். இந்த வல்லமை நமது இருதயங்களில் ஏற்படுகிறது. இன்றும் அன்று போலவே 'பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்' என்று இயேசு கூறிக் கொண்டிருக்கிறார்.

ஆனாலும் நாம் கேயாசியைப் போல தீர்க்கதரிசியின் வல்லமையற்றவர்களாக அவனது கோலைப் பிடித்திருக்கிறோம் 2ராஜா.4. விசுவாசிகள் அனலற்று, லௌகீகத்திலும், பாவிகள் பாவத்தில் மரித்தும், சபைகள் அனலற்றும், மக்கள் மடிந்து கொண்டுமிருக்கிறார்கள். நாம் தீர்க்கதரிசனம் சொல்லுகிறோம், ஆனால் கண்ணீர் விடவில்லை. "காற்றே வா". ஆவியின் மூச்சு மரண பள்ளத்தாக்குகளை ஜீவனுள்ள தாய் மாற்றும். அங்கிருந்து தேவனுக்காகப் பெரிய சேனை எழும்பும்.

தூய ஆவியானவரின் அபிஷேகம் ஆவிக்குரிய குண நலன்களுக்கும், ஆவிக்குரிய மகிழ்வுக்கும் ஏதுவாகிறதுபோல ஆவிக்குரிய வல்லமைக்கும் ஆதாரமாயிருக்கிறது. விசுவாசியும், சபையும் அழைக்கப்பட்ட அழைப்புக்கு இந்த வல்லமை போதுமானது.

தூய ஆவியானவர் சபை ஊழியத்திற்கு இன்றியமையாதவர். 'பலத்தினாலுமல்ல, பராக்கிரமத்தினாலுமல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார் சக.4:6.

ஜான் வெஸ்லி தேவபயமுள்ள, பயனுள்ள, மாதிரியான வாழ்வு உடைய வராயிருந்தும், தூய ஆவியானவரால் நிரப்பப்பட்ட போது தான் அக்காலத்தில் மேன்மை பெற்றார். தாமஸ் சால்மர் பரிசுத்த ஆவியைப் பெற்றபடியால் சிறந்த வேதபண்டிதரும், பிரசங்கியுமான அவர் ஒரு சுவிசேஷகனாக இவ்வுலகிற்கும் அவரது கால சபைக்கும் ஓர் அதிசயமாக விளங்கினார்.

சாதாரண மனிதனான மூடி எழுத்தறிவற்ற, கலாச்சாரமற்ற ஒருவராயிருந்தும் தேவ ஆவியைப் பெற்றபடியால் உலக சுவிசேஷகனாக மாறினார். தேவனுடைய பாதப்படியில் அமர்ந்து ஆத்தும ஆதாயம் செய்யும் கலையைக் கற்றுக் கொண்டார். ஊழியம் செய்பவர்கள் பலர் கடினமாகவும் உத்தமமாகவும் உழைத்தாலும் பயனில்லை. ஆனால் தூய ஆவியினால் நிரப்பப்பட்டவர்களால் வறண்ட நிலங்களில் சிறந்த விளைச்சல் ஏற்படுகிறது.

பாவிகள் இரட்சிக்கப்படவும், பின்மாற்றமடைந்தவர்களை மறுபடியும் கொண்டுவரவும், ஆவிக்குரிய நிலையில் தணிந்து போனவர்களை உயிர்ப்பிக்கவும், ஆவிக்குரிய பசி நிறைந்தவர்களை திருப்திப்படுத்தவும் சபைக்கு பரிசுத்த ஆவியின் நிறைவு தேவை.

'பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்' என்பது ஒரு வாக்குத்தத்தம்தான். அருளிச் செய்யாததை தேவன் கட்டளையிடுவதில்லை. தூய ஆவியானவர் 'வாக்குத்தத்தத்தின் ஆவியானவர்' எபே.1:13. அவர் பிதாவின் வாக்குத்தத்தம் என அழைக்கப்படுகிறார் லூக்.24:49. வாக்குத்தத்தம் விசுவாசத்தினால் பெறப்படுகிறது. எனவே வாக்குத்தத்தங்கள் விசுவாசிப்பதற்காக அளிக்கப்பட்டுள்ளன. எனவே இந்த வாக்குத்தத்தத்தையும் நாம் விசுவாசித்து பெற்றுக் கொள்வது அவசியம்.

"நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்" எபே.1:13.

சீஷர்கள் பெரிய சாதனைகளை அனுபவிக்காத போதும் அல்லது ராஜ்யத்தைப் பரப்ப பெரிதாக எதையும் செய்யாதபோதும் 'பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்' என்று அவர்களிடம் கூறினார். தேவ ராஜ்யத்தின் உண்மையான தன்மை எத்தகையது என்ற அறிவு இல்லாதபோது இதைக் கூறினார். இந்த நிலையில் அவர்கள் தூய ஆவியானவரை வெகு விரைவில் பெறக் கூடியதாயிருந்தால் நாமும் அதைப் பெற்றுக் கொள்வது எவ்வளவு சாத்தியமானது!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது. அந்தப் பழங்குடி வாலிபன் எதையெல்லாம் நான் செய்ய வேண்டும், எதையெல்லாம் நான் செய்யக்கூடாது என ஒரு பட்டியல் தரவேண்டி நின்றான். இன்றைய கிறிஸ் தவமும் பட்டியலைப் பின்பற்றும் கிறிஸ்தவமாகிவிட்டபடியால் கிறிஸ் துவை அறிவிக்க ஆட்கள் இல்லை.

தங்கள் மகன்/ மகள் மருத்துவராக அல்லது பொறியாளராக அழைப்புத் தேவையில்லையாம். ஆனால், ஊழியத் திற்கு போவதற்கு மட்டும் அழைப்புத் தேவையாம். உலகெங்கும் போய் நற்செய்தி அறிவித்து சீடராக்குங்கள் என சீடர்களுக்கு சொல்லப்பட்டது. அது அழைப்பில்லை ஆனால், சகல நாட்களுளிலும் உங்களோடு இருக் கிறேன் என்பது வாக்குத்தத்தமாம். உணர்வடைந்து உண்மையை சிந்தித்து கொள்ள ஆண்டவர் நமக்கு இந்த புதிய ஆண்டிலே உதவட்டும்

இந்தப் புதிய ஆண்டில் நாம் எல்லா ஜனத்திற்கும் சந்தோஷத்தை உண்டாக் கும் நற்செய்தியை நம் தேசத்தின் மக்கள் கூட்டங்களுக்கு அறிவிக்க ஆண்டவர் நமக்கு இரங்கட்டும்.

×××××××

எழுப்புதலுக்காக இதய கதறல் 2017

இயேசு நம்மோடு சபை, கருங்கல்
16-09-2017

இயேசு நம்மோடு சபையின் செப்டம்பர் 2017 மாத பத்திரிகையில் போதகர் இவ்வாறு எழுதியிருந்தார்:

"குமரி மாவட்டத்தை ஜெபத்தி னால் நிரப்ப வேண்டும் என்ற பாரத்தை கர்த்தர் என் இருதயத்தில் கொடுத்ததி னால் பல கிராமங்களிலும் முக்கிய இடங்களிலும் சென்று ஜெபித்து வருகி றோம். ஜெப நடையாகவும் ஜெப யாத்திரையாகவும் அதை செயல்படுத்த ஆரம்பித்திருக்கிறோம். எழுப்புதலுக் காக தினந்தோறும் நம்முடைய சபையில் ஜெபித்து வருகிறோம். மாதம் தோறும் விசேஷ முழங்கால் ஜெபத்தை யும் நியமித்திருக்கிறோம். நாம் சந்திக்கப் போகும் மிகப் பெரிய எழுப் புதலில் நாமும் முக்கிய பங்குள்ளவர் களாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்".

இப்பேர்பட்ட தரிசனத்தையுடைய போதகர் ஒருவருடைய சபை, ஜெபிக் கிற சபையாயிருப்பதில் ஆச்சரியப்படு வதற்கு ஒன்றுமில்லை. அதன்படி சுமார் 400 பேர் பங்கு பெற்று ஆரம்பம் முதல் முடிவு வரைக்கும் அதிகமாய், கருத்தாய் ஜெபித்தார்கள். தேவன் மாத்திரம் மகிமைப்படுவாராக.

இயேசு நம்மோடு சபை, கருங்கல் போதகர் பாஸ்டர் **P.ஜெயந்தராஜ்** அவர் களையும், மனைவி சகோதரி லைசாள் அவர்களையும், மகன் சுவி. ஜெனிட் பர்ணபாஸ் -யையும் தேவன் அதிகமாய் ஆசீர்வதிப்பாராக, கிருபையாய் பயன் படுத்துவாராக.

மாரநாதா சபை, பொள்ளாச்சி
07-10-2017

கர்த்தருடைய கிருபையினால் 6-ம் தியதி மாலை சுமார் 5.00 மணிக்கு ஒரு வாகனத்தில் நாகர்கோவிலிலிருந்து புறப்பட்டுப்போய் இரவு 1.30 மணிக்கு பொள்ளாச்சி போய் சேர்ந்தோம். சில மணி நேரம் இளைப்பாறிவிட்டு சபைக்குச் சென்றோம். உபவாச ஜெபம் ஆண்டவருக்கு மகிமையாயிருந்தது. சபையின் போதகர் B.**சகரியா** அவர்கள் ஜெபத்தோடு, மிகுந்த பிரயாசத்தோடு உபவாச ஜெபத்தை ஒழுங்கு செய்திருந் தார்கள். அவரையும், மனைவி, இரண்டு பெண் பிள்ளைகளையும் தேவன் கிருபையாய் ஆசீர்வதிப்பாராக.

எழுப்புதலுக்காக இதய கதறல் 2018
எங்களுக்காக ஜெபிக்க 100 முழங்கால் வீரர்கள் தேவை

கர்த்தருக்குச் சித்தமானால், 2018-ம் ஆண்டு பாண்டிச்சேரி, கேரளா, கர்நா டகா, அந்தமான், மஹாராஷ்டிரா போன்ற பிற மாநிலங்களிலும் இவ்வித உபவாச ஜெபத்தை நடத்த வாஞ்சித்து ஜெபிக்கிறோம். நீங்கள் செய்ய வேண்டியது:

I. தினந்தோறும் எங்களுக்காக, எழுப்பு தலுக்காக, **எழுப்புதலுக்காக இதய கதறல் 2018**-க்காக ஜெபிக்க வேண்டியது மாத்திரமே. நீங்கள் உங்கள் பெயரை எங்களிடம் பதிவு செய்தால் சமயத் துக்கு சமயம் உங்களுக்கு PRAYER CARD தபாலில் அனுப்பி வைப்போம்.

II. **உங்களுக்கு முடியுமானால் மாத்திரம்** உபவாச ஜெபம் நடைபெறும் நாளில் ஒரு வேளை உணவையோ (காலை ஆகாரம்) இருவேளை ஆகாரத்தையோ (காலை, பகல்) உண்ணாமல் உபவாசத் தோடு ஜெபிக்கலாம்.

III. **உங்களுக்கு வசதிப்படுமானால் மாத்திரம்** நீங்கள் சிலராக கூடி, அதே நாளில், நீங்கள் இருக்கிற இடத்திலேயே 7மணி நேரம் உபவாச ஜெபம் நடத்துவது.

07-10-2017 அன்று குஜராத்தில் NIMS சார்பாக இவ்வித உபவாச ஜெபம் நடைபெற்றது. ஆரம்பத்தில் சுமார் 10 பேரும் முடிவில் 15 பேர்களும் இருந் தார்கள். **உங்கள் அன்பான பதிலை உங்கள் சகோதரன் அதிக ஆவலோடு எதிர்பார்க்கிறேன்.**

ஒரு வாசகர் கடிதத்தை கீழே அச்சிடுகிறேன்:

தூதன் எனது மகளின் பெயரில் வருகிறது. தொடர்ந்து 2018-லும் பெறு வதற்காகவே இதை அனுப்பியுள்ளேன். சிரமம் பாராமல், "தயாளன் தெரு" என்பதை மட்டும் நீக்கும்படி அன்பு டன் கேட்டுக் கொள்கிறேன். எங்கள் ஜெபங்களில் எப்போதும் ஜெபிக்கின் றோம், நன்றி.

TN 02039 S

2018-ம் ஆண்டும் வருகையின் தூதன் மாத பத்திரிகையை நீங்கள் பெற்றுக் கொள்ள விரும் பினால் தயவு செய்து கீழே அச்சிட்டி ருக்கும் தகவல்களை **உடனே** தபால், மின் அஞ்சல், குறுந்தகவல் (SMS), மணி யாடர் கூப்பன் போன்ற ஏதாவது ஒரு வழியில் அலுவலகத்திற்கு தெரிவிக்கு மாறு அன்பாய் அறிவிக்கிறோம்.

பெயர்:.....

கதவுஎண், தெருப்பெயர்: .....

முகவரி:.....

.....

நகரம், அஞ்சலகம்: .....

அஞ்சல் குறியீட்டு எண்:.....

தொலைபேசி:.....அலைபேசி.....

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

முகவரி மாறுதல் மற்றும் பத்திரிகை வரத்தவறி னால் தெரிவிக்கவும், M.O. மூலம்/ வங்கி வழியாக காணிக்கை அனுப்பினால் அறிவிக்கவும் வேண்டிய அலுவலக தொலைபேசி எண்கள்:

95432 21008
04652 403295 (10.00 - 1.00;2.00-6.00)
94897 40295 ஞாயிறு விடுமுறை

ஜெபத்திற்காக மட்டும் இந்த தொலைபேசியை உபயோகியுங்கள்
94980 30295 (10.00 -1.00; 2.00-6.00)

ஆண்டவரே, உமது கண்ணீர்களை எங்களுக்குத் தாரும்!

Give us thy tears Lord!

Horatius Bonar

நமது ஆத்துமாக்களை இரட்சித் தவர். இரட்சிக்கப்படாதவர்களுக்காகக் கண்ணீர் விடும்படியாக போதித் திருக்கிறார். ஆண்டவரே உம்மிலிருந்த சிந்தை எங்களிலுமிருக்கட்டும். எங்கள் இருதயங்கள் பிறருக்கு எதிராகக் கடினமாயிருக்கின்றன. எனவே கண்ணீர் விட எங்கள் கண்களில் கண்ணீரைத் தாரும். எங்களைச் சுற்றிலும் ஆயிரக்கணக்கானோர் மாண்டு கொண்டிருக்கிறதைக் காண்கி றோம். ஆனாலும் எங்கள் நித்திரை கலைக்கப்படவில்லை. அவர்களது கொடூர அழிவு எங்களுக்கு வேதனை யைத் தரவில்லை. எங்கள் சமாதானம் அவர்களது அழுகுரலால் கலைக்கப்பட வில்லை.

எங்கள் குடும்பங்களோ, பள்ளி களோ, சபை மக்களோ, பட்டணங் களோ, தேசமோ, உலகமோ எங்களை அனுதினமும் முழங்காலில் நிற்கச் செய்யவில்லை. ஒரு ஆத்தும இழப்பு கூட பயங்கரமல்லவா!

"என்ன இரகசியம்! ஒரு ஆத்து மாவும் அதன் நித்தியமும் இன்னொரு வருடைய ஜெபத்தை சார்ந்திருக் கிறதே!"

ஆத்தும ஆதாயப் பணி செய்கிறவர் கட்டாயம் ஜெபிக்க வேண்டும்

The soul winner must pray

R.A.Torrey

ஆத்தும ஆதாயப் பணி ஒவ்வொரு படியிலும் ஜெபத்துடன் செய்யப்பட வேண்டும்.

நாம் சரியான நபர்களிடம் நடத்தப்பட தேவனிடம் ஜெபிக்க வேண்டும்:

நாம் சந்திக்கிற யாவருக்கும் சுவிசேஷம் அறிவிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கவில்லை. சில வேளைகளில் அது நேரத்தை வீணாக்கிவிடும். எனவே இதற்காக தேவ ஆலோசனையைப் பெறவேண்டும்.

நாம் வழிநடத்துகிறவர்களிடம் என்ன பேச வேண்டும் என்றும் தேவனிடம் கேட்க வேண்டும்:

ஒவ்வொரு விதமான மக்களிடமும் பேச தேவநடத்துதல் அவசியம். சில வேளைகளில் தேவன் குறிப்பிட்ட சில வேதபகுதிகளின் அடிப்படையில் பேசும்படி வழிநடத்துவார்.

நான் சொல்ல எதிர்பார்க்கப்பட்டவைகளைப் பேச வல்லமை தரும்படி தேவனிடம் கேட்க வேண்டும்:

நாம் ஒரு செய்தியைக் கொடுக்க செய்தியை மட்டுமல்ல, அதைப் பகிர்ந்து கொள்ள வல்லமையையும் கேட்க வேண்டும். சில ஊழியக்காரர் இரட்சிக்கப்படாத மனிதரிடம் பல வசனங்களை எடுத்துக் கூறினாலும் அவர்கள் அதனை ஒப்புக் கொள்வ தில்லை. இறுதியில் தங்கள் சொந்த பிரயாசம் விருதா எனக் கண்டு கொள்கிறார்கள். பின்பு தேவனிடம் தங்களைத் தாழ்த்தி ஜெபிப்பதால் மிகக் கடினமான காரியங்களும் எளிதாக மகிழ்ச்சியில் முடிக்கப்படும்.

நமது பணி முடிந்தபின் தேவன் தொடர்ந்து செயல்படும்படி தேவனிடம் ஜெபிக்க வேண்டும்:

நாம் செய்யவேண்டிய கடமைகளை முடித்தபின்பு வெற்றியானாலும் தோல்வியானாலும் ஜெபத்தின் மூலம் தேவனிடம் ஒப்படைக்க வேண்டும்.

ஒரு ஆடம்பரமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு சரீரத் தேவைகளின் மீது அதிகமான விருப்பத்தை ஏற்படுத்திக் கொண்டு, ருசியான பதார்த்தங்களின் மீது அளவுக்கு அதிகமான ஆசையுடன் வாழும் எந்த மனிதனும், கடவுளின் முழுமையான வல்லமையைப் பெற்று அனுபவிக்க முடியும் என்று நான் நம்பவில்லை

பத்திரிகை செய்திகள்

வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம்

அக்டோபர் 12

குமரி மாவட்டத்தை சேர்ந்த வேலைவாய்ப் பற்ற இளைஞர்கள் உதவித் தொகை பெற விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட வேலை வாய்ப்பு உதவி இயக்குனர் செந்தில்குமார் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது.

உதவித்தொகை

குமரி மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத் தில் 10-ம் வகுப்பு தோல்வி மற்றும் அதற்கு மேலும் உள்ள கல்வித் தகுதியை பதிவு செய்து 5 ஆண்டுகள் முடிவடைந்து தொடர்ந்து புதுப்பித் தல் செய்து வரும் பதிவுதாரர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 1-10-2017 முதல் 31-12-2017-ந் தேதி வரையி லான காலத்துக்கு உதவித் தொகை வழங்கு வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் வேலைவாய்ப்பு அலுவலகத் தில் பதிவு செய்து 30-9-2017 தேதியில் 5 ஆண்டுகள் நிறைவு செய்திருத்தல் வேண்டும். உச்ச வயது ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி யினருக்கு 45 வயதும் மற்ற அனைத்து பிரிவினர்களுக்கும் 40 வயதும் முடிவடையா மல் இருக்க வேண்டும்.

பதிவுதாரர்கள் வேலை வாய்ப்பு அலுவலக பதிவு அடையாள அட்டை மற்றும் அனைத்து அசல் கல்விச்சான்றிதழ்களுடன் அலுவலக வேலைநாளில் (காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை) நேரில் வந்து இலவசமாக விண்ணப்பப் படிவங்களை பெற்றுக் கொள்ள லாம். (முற்றத்திறனாளிகளைப் பொறுத்தவரை 30-9-2017 தேதியில் பதிவு செய்து ஒரு வருடம் முடிவுற்றிருந்தால் போதுமானது. மேலும் இவர் களுக்கு வயது மற்றும் வருமான உச்சவரம்பு ஏதுமில்லை). பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத் துடன் தேசியமயமாக்கப்பட்ட வங்கி சேமிப்புக் கணக்கு புத்தகம், மாற்றுச் சான்றிதழ் மற்றும் அனைத்து அசல் கல்வி சான்றிதழ்களுடன் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நேரில் வந்து வருகிற நவம்பர் மாத இறுதிக்குள் அளிக்க வேண்டும். ஏற்கனவே விண்ணப்பித்து உதவித் தொகை பெற்று வருபவர்கள் மீண்டும் விண் ணப்பம் அளிக்க தேவையில்லை. உதவித் தொகை பெறுவதற்கு குடும்ப ஆண்டு வருமா னம் 50 ஆயிரம் ரூபாய்க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

மாற்றுத்திறனாளிகள்

மாற்றுத்திறனாளிகளை பொறுத்தவரை பள்ளி இறுதி வகுப்பிற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.600-ம், பிளஸ்-2 தேர்ச்சிக்கு ரூ.750-ம், பட்டதாரிகளுக்கு ரூ.1000-ம் வழங்கப்படுகிறது.

இதர பதிவுதாரர்களை பொறுத்தவரை பள்ளியிறுதி வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.200-ம், பள்ளியிறுதி வகுப்பு தேர்ச்சி பெற்ற வர்களுக்கு ரூ.300-ம், பிளஸ்-2 தேர்ச்சிக்கு ரூ.400-ம் பட்டதாரிகளுக்கு ரூ.600-ம் தமிழக அரசால் தற்போது உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது என்ற விவரமும் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே உதவித் தொகையை பெற்று வரும் பயனாளிகள் இந்த உதவித்தொகையை 3 ஆண்டுகள் தொடர்ந்து பெற வேண்டுமானால் அவர்கள் சுய உறுதி மொழி ஆவணத்தை ஆண்டிற்கு ஒருமுறை சமர்ப்பிக்க வேண்டும். இதன்படி 1-10-2017 வரையிலான காலத்திற்கு உதவித்தொகை பெறும் பயனாளிகள் தொடர்ந்து உதவித் தொகை பெறுவதற்கு சுய உறுதிமொழி ஆவணத்தை அதற்குரிய படிவத்தில் நாகர் கோவில் மாவட்ட வேலை வாய்ப்பு அலு வலகத்தில் வருகிற நவம்பர் மாத இறுதிக்குள் (காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை) சமர்ப்பிக்க வேண்டும்.

தொழில் படிப்புகளுக்கு. . .

இதில் வங்கி கணக்கு விவரம். . .மற்றும் வேலை வாய்ப்பு அலுவலக பதிவேடு ஆகிய வற்றை மறுபரிசீலனைக்கு சமர்ப்பிக்க வேண்டும். 3 ஆண்டுகள் உதவித்தொகை பெற்று முடித்தவர்கள் சுய உறுதி மொழி ஆவணம் சமர்ப்பிக்க தேவையில்லை.

பொறியியல் பட்டதாரிகள் (பி.இ) மருத்துவ படிப்பு (எம்.பி.பி.எஸ்.) மற்றும் சட்டப்படிப்பு (பி.எல்.) போன்ற தொழில் படிப்புகளை படித்த பதிவுதாரர்கள் வேலைவாய்ப்பற்றோர் நிவார ணம் பெற இயலாது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

தினத்தந்தி

உலகைச் சுற்றி

ஜப்பானின் சியாஷுதீவில் உள்ள ஷின்மோ என்கிற எரிமலையில் 6 ஆண்டுகளுக்கு பிறகு, நேற்று அதிகாலை சிறிய அளவில் வெடிப்பு ஏற்பட்டது. இதையடுத்து, எரிமலையை சுற்றி உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயரும்படி எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

Registered with the Registrar of News Paper For India under R.N.I. TN TAM 11967/'67
Postal Reg. No. KKI/63/2015-2017
Date of Publication : 27th of Every month
Date of Posting : 27th & 28th of Every month

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

To